Deccan Chronicle
Dated: 24.12.2024

# FIRST MEET OF JPC ON ONE NATION, ONE POLL ON JAN. 8

**New Delhi, Dec. 23:** The first meeting of the 39-member parliamentary panel on 'one nation, one election' is set to be held on January 8, setting the tone for nationwide deliberations on the key poll reform measure of the BJP-led NDA government.

Parliamentary sources said the first meeting of the Joint Committee on bills for simultaneous elections to the Lok Sabha and state Assemblies, chaired by BJP member P.P. Chaudhary, is likely to be an introductory one, with officials briefing the panel on the two bills to implement a long-cherished election promise of the BJP.

The Times of India

Dated: 24.12.2024

# AIADMK leadership tussle intensifies before the EC

TIMES NEWS NETWORK

**Chennai:** AIADMK general secretary **Edappadi K Palaniswami** and former chief minister **O Panneerselvam** on Monday asserted their leadership before the election commission. "There is only one AIADMK. Edappadi-led AIADMK is the only AIADMK and there is no other (AIADMK)," former minister C Ve Shanmugam said, representing the AIADMK before the commission in New Delhi. The election commission proceedings followed a Madras high court order directing the commission to decide on two leaves symbol case within four weeks. The court's order was in response to a petition filed by S Surya Moorthi concerning the allocation of the party's two leaves symbol. The commission scheduled hearings for all involved parties on Dec 23 and 24, asking for written responses by Dec 19. Shanmugam argued that Surya Moorthi had no locus standi to question the party's internal affairs. He pointed out Moorthi's 2021 election run against the two leaves symbol as evidence of his non-membership.

Panneerselvam, represented by counsel Rajalakshmi Prakash, maintained he remains the AIADMK coordinator. He argued that his five-year term, after his election in Dec 2021, extends until Dec 2026. "OPS said he is still the coordinator of AIADMK. Whatever may be the conditions imposed, he is capable of contesting the election for the top post. That is why he was removed," Rajalakshmi said. Panneerselvam accused the Palaniswami group of manipulating party bylaws to favour Palaniswami's appointment as AIADMK general secretary.





The commission has also sent notices to six more individuals, including former AIADMK MP P Raveendhranath, former MP K C Palanisamy, and former AIADMK Karnataka secretary V Pugazhendi, to appear for a personal hearing on Tuesday. The commission has given the parties the opportunity to make claims and objections on Dec 30 and thereafter the responses on Jan 13.

Daily Thanthi
Dated: 24.12.2024

### இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# டெல்லி தேர்தல் கமிஷன் அலுவலகத்தில் சி.வி.சண்முகம் ஆஜர்



புதுடெல்லி, டிச.24-
இரட்டை இலை சின்னம் விவகார வழக்கு தொடர்பாக, டெல்லியில் உள்ள தேர்தல் கமிஷன் அலுவலகத்தில் விசாரணைக்கு முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் உள்ளிட்டோர் ஆஜர் ஆனார்கள்.

## இரட்டை இலை சின்னம்

அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் தொடர்பான சில வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் முடிவுக்கு வரும் வரை இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்த யாரையும் அனுமதிக்கக் கூடாது என்றும், இது குறித்து தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கு, கடந்த 4-ந்தேதி விசாரணைக்கு வந்த போது, இதுகுறித்து 4 வாரங்களுக்குள் விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் என தேர்தல் கமிஷனுக்கு ஐகோர்ட்டு உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் இந்த வழக்கோடு தொடர்புடைய அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் மற்றும் சூரியமூர்த்தி, கே.சி. பழனிசாமி, புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், எம்.ஜி.ராமச்சந்திரன் உள்ளிட்டோருக்கு தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பி, அவரவர் தரப்பு வாதங்களை எழுத்துப்பூர்வமாகவும், நேரிலும் தெரிவிக்கலாம் என கேட்டுக் கொண்டது.

## நேரில் ஆஜர்

இதன்படி, வழக்கில் தொடர்புடைய அனைவரும் கடந்த 19-ந் தேதி எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்தனர். இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சிலர் நேற்று நேரிலும் ஆஜர் ஆனார்கள்.

எடப்பாடி பழனிசாமி தரப்பில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வக்கீல் ராஜலட்சுமி மற்றும் சூரியமூர்த்தி ஆகியோர் தேர்தல் கமிஷன் அலுவலகத்துக்கு வந்திருந்தனர். அவர்களிடம் அதிகாரிகள் விளக்கங்களை கேட்டு அறிந்தனர். அவரவர் தரப்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

## அருகதை இல்லை

இந்த விசாரணை குறித்து சி.வி.சண்முகம் நிருபர்களிடம் கூறியதாவது:-

அ.தி.மு.க.வில் உறுப்பினராக இல்லாத ஒருவர், இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்ட அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ வேட்பாளரை எதிர்த்து, எம்.. ஜி.ஆர். மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்ட ஒருவர் மனு அளித்து உள்ளார். அவருக்கு அ.தி.மு.க. உட்கட்சி விவகாரங்கள் பற்றி பேச அருகதை இல்லை. எனவே அந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரி இருக்கிறோம். மீண்டும் விசாரிப்பதாக சொல்லி இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றும் விசாரணை

ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் ஆஜரான வக்கீல் ராஜலட்சுமி, 'கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் ஓ.பன்னீர்செல்வத்தைத்தான் ஒருங்கிணைப்பாளராக தேர்வு செய்து உள்ளனர். எனவே இரட்டை இலை சின்னத்தை அவருக்கே ஒதுக்க வேண்டும்' என தேர்தல் கமிஷனில் கேட்டுக் கொண்டதாக தெரிவித்தார்.

இதற்கிடையே வழக்கில் தொடர்புடைய மற்றவர்கள் தனிப்பட்ட விசாரணையை கோரி இருப்பதால் அவர்களிடம் தேர்தல் கமிஷன் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 11 மணிக்கு விசாரணை நடத்துகிறது.

Daily Thanthi
Dated: 24.12.2024

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா பற்றி ஆய்வு செய்ய

# நாடாளுமன்ற குழு முதல் கூட்டம்

## ஜனவரி 8-ந்தேதி நடக்கிறது

புதுடெல்லி, டிச.24-

நாடாளுமன்றத்துக்கும், சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும் ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதாவான அரசியலமைப்பு (129-வது திருத்தம்) மசோதா மற்றும் யூனியன் பிரதேசங்கள் சட்டங்கள் (திருத்தம்) மசோதா ஆகியவற்றை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் மத்திய சட்ட மந்திரி அர்ஜுன் ராம் மேக்வால் அறிமுகம் செய்தார்.

இதற்கு இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து மின்னணு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது. இதில் மசோதாவுக்கு ஆதரவாக 269 ஓட்டுகளும், எதிராக 198 ஓட்டுகளும் பதிவானது. பின்னர் இந்த மசோதாக்கள் நாடாளுமன்ற குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

இதற்காக பா.ஜனதா எம்.பி. பி.பி.சவுத்ரி தலைமையில் 39 எம்.பி.க்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இவர்களில் மக்களவையில் இருந்து 27 எம்.பி.க்களும், மாநிலங்களவையில் இருந்து 12 எம்.பி.க்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவின் முதல் கூட்டம் வருகிற ஜனவரி 8-ந்தேதி நடக்கிறது. அப்போது இந்த மசோதாக்கள் குறித்து ஆய்வு செய்யப்படும். அதில் அனைத்து கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் மசோதாக்கள் குறித்து தங்களது கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

Dinamalar, Dated: 24.12.2024

# இரட்டை இலை விவகாரம்: சண்முகம் விளக்கம்

– நமது டில்லி நிருபர் –

இரட்டை இலை சின்னம் குறித்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டுமென்று, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், அ.தி.மு.க., சார்பில், முன்னாள் அமைச்சர் சண்முகம் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகள் அனைத்தும் முடிவுக்கு வரும் வரையில், இரட்டை இலை சின்னத்தை யாருக்கும் ஒதுக்கக் கூடாது என்று கோரி, சூரியமூர்த்தி என்பவர் தலைமை தேர்தல் ஆணையத்துக்கு மனு அளித்திருந்தார். இந்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தன் மனுவை பரிசீலிக்க உத்தரவிட வலியுறுத்தி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி, முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும், விளக்கத்தையும் கேட்டு, இந்த விவகாரம் குறித்து நான்கு வாரத்திற்குள் முடிவெடுக்கும்படி உத்தரவிட்டு இருந்தது.

இதனடிப்படையில், சம்பந்தப்பட்டோர் தங்களது கருத்தையும், விளக்கத்தையும் அளிக்கும்படி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அ.தி.மு.க., சார்பில் விளக்கமளிக்க, ராஜ்யசபா எம்.பி.,யான சி.வி.சண்முகம், டில்லி தலைமை தேர்தல் ஆணையத்திற்கு நேற்று வந்திருந்தார். 'மனுதாரர் சூரியமூர்த்தி என்பவர் தனிக் கட்சி ஆரம்பித்து, அ.தி.மு.க.,வுக்கு எதிராகவே போட்டியிட்டவர் என்பதால், அவரது மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்' என அவர் வலியுறுத்தினார்.

பன்னீர் செல்வம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ராஜலட்சுமியோ, 'அடிப்படை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு, இப்போதும் கட்சியின் ஒருங்கிணைப்பாளராக பன்னீர் செல்வமே இருப்பதால், சின்னத்தை தங்களுக்கு ஒதுக்க வேண்டும்' என வலியுறுத்தினார்.

மனுதாரர் சூரிய மூர்த்தியோ, 'உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படாமல் பொதுச்செயலர் பதவியில் பழனிசாமி இருப்பதாக கூறி, அவர் தரப்புக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது' என வலியுறுத்தினார்.

மூன்று தரப்பு விளக்கத்தையும் கேட்ட தேர்தல் ஆணைய அதிகாரிகள், பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வம் ஆகிய தரப்பினர், வரும் 30லும், மனுதாரர் அடுத்த மாதம் 13ம் தேதியும் நேரில் ஆஜராகி எழுத்துப்பூர்வமான விளக்கத்தை அளிக்கும்படி அறிவுறுத்தியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.